விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை (31.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

## கொரோனா +4,562

(கொழும்பு)
நாட்டில் மேலும் 4,562 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட் 15

## கோவிட் மரணங்களை கட்டுப்படுத்த வேண்டுமானால் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்

### விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)
அதிகரித்துவரும் கோவிட் மரணங்களைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்.

தற்போதைய கட்டுப்பாடு போதுமானதாக இல்லை என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்ணாந்து தெரிவித்தார். 15

## பரா ஒலிம்பிக்கில் இலங்கை வீரர் உலக சாதனை



04

## நாட்டில் 30 – 40 வீதமான தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர்

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம்



*(கொழும்பு)* இலங்கையில் கொரோனாத் தொற்று கட்டுக்கடங்காமல் பரவி வருகின்றது. 30 தொடக்கம் 40 வீதமான கொரோனாத் தொற்றாளர்கள் இன்னும் சமூகத்தில் அடையாளம் காணப்படாமல் உள்ளனர் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாவில் சாதகமான தீர்வு எட்டப்படும்

### ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் 15

## கொரோனாவால் கிளிநொச்சியில் இருவர் பலி

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
கிளிநொச்சி 15

## வவுனியா ஓலுமடுவில் மரணச் சடங்கில் பங்குகொண்ட 28 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியா ஓலுமடு கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொண்ட 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இவ்விடயம்குறித்து மேலும் தெரியவருவ 15

## யாழில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள்

### பயனாளிகளிடம் கையளிப்பு



06

## முல்லை. விசுவமடுவில் கையளிக்கப்பட்ட சடலத்தை மீளப்பெற்ற சுகாதாரத் தரப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு வள்ளுவர்புரத்தினைச் சேர்ந்த பெண் உயிரிழந்த நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குடும்பத்தார் மரணச்சடங்கினை முன்னெடுக்கமேற்கொண்ட 15

## அத்தியாவசிய உணவு விநியோகத்துக்கான அவசரகால விதிமுறை பிரகடனம்

### ஜனாதிபதி கோட்டா உத்தரவு

(கொழும்பு)
அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவது தொடர்பான அவசரகால விதிமுறைகள் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 15

## நாட்டில் மேலும் 216 மரணம்

(கொழும்பு)
நாட்டில் மேலும் 216 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள 15

## கொரோனா

| | |
|---|---|
| யாழ் | - 75 |
| வடக்கு | -314 |

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த 75 பேர் உட்பட வட மாகாணத்தில் மேலும் 314 பேருக்கு கொரோனாத் 15

## யாழ்.மாவட்டத்தில் கோவிட்டால் ஐவர் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றினால் நேற்று 5 பேர் உயிரிழந்துள்ளனர்.
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்தார்.
அதேவேளை, 15

# நெல்லியடியில் வயோதிபப் பெண் சுகவீனத்தால் திடீர் மரணம்

## சடலம் பிசிஆர் சோதனைக்கு காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய வீதியில் வயது முதிர்ந்த பெண் ஒருவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சியான காய்ச்சல் இருந்ததாகவும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீட்டில் தங்கியிருந்த வேளை நேற்று வயிற்றோட்டம் மற்றும் அதிக காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து நோயாளர் காவுவண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவருக்கான பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(ம-03,30)

# வடமராட்சி கிழக்கில் தாயும் மகனும் அடுத்தடுத்து மரணம்

(கரணவாய்)

தாயும் மகனும் அடுத்தடுத்த நாள் உயிரிழந்த சம்பவம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி கிழக்கு மாமுனை, செம்பியன்பற்றைச் சேர்ந்த தர்மலிங்கம் தங்கம்மா (வயது-84) என்பவர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இயற்கை மரணம் எய்தியுள்ளார்.

அன்றைய தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கொரோனா சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவரது மகனான தர்மலிங்கம் இரத்தினகலசிங்கம் (வயது-63) என்பவர் நேற்று திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

தாயார் இறந்து மறுநாள் மகன் இறந்த சம்பவம் வடமராட்சிகிழக்குப் பகுதியில் பெரும் சோகத்தைஏற்படுத்திஉள்ளது.

(ம-03,60)

# அதிபர், ஆசிரியர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு

(கொழும்பு)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அமைச்சரவை இணைக் குழுவினால் முன் வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் இருந்து பல கட்டங்களின்கீழ் இது நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன் மொழிவுகள் வரவு - செலவுத் திட்டத்தின் சேர்க்கப்படும்வரை அதிபர், ஆசிரியர்களுக்கு மாதாந்த உதவித் தொகையாக 5 ஆயிரம் ரூபா வழங்க அரசு முன்வந்துள்ளது.

(ம-03)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03.01.1948

மறைவு 28.08.2021

அமரர்

## ஆறுமுகம் பாலச்சந்திரன்

[ யாழ். மாநகராட்சி மன்றம் (மின்சார சபை) - களஞ்சிய அறைப் பொறுப்பாளர் ]

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகளை வேரென தாங்கினீர்களே!
மாயப் புயல் வடிவில் காலன் இன்னுயிர் பறிக்க
சோகத்தைத் தந்துவிட்டு சொல்லாமல் சென்றதென்ன!
கண்களைக் குளமாக்க விதி செய்த விளையாட்டால்
கதிகலங்கி நிற்கின்றோம் சொல்வதறியாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7830)

அன்னாரின் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர் ( செ. இராசையா )

கைதடி வடக்கு,
கைதடி.

# கண்ணீர் அஞ்சலி



ஜெ. நிரோதினியின் அன்புத் தாயார்

## திருமதி விஜயகுமாரி சிவஞானம்

அவர்கள் நேற்று முன்தினம் (29.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை,
ஆருயிர் நண்பிகள்

# கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் முன்னாள் நிர்வாக சபை மூத்த உறுப்பினரும் தையிட்டி கிழக்கு கிராம முன்னேற்ற சங்கத்தின் முன்னாள் மூத்த தலைவரும் சமூக சேவையாளருமாகிய

அமரர் **தில்லையம்பலம் கனகசபை**

(7831)



அவர்கள் கடந்த 27.08.2021 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாவல்லி சனசமூக நிலையத்தினதும் முன்பள்ளியினதும் நிர்வாகத்தினர் மற்றும் உறுப்பினர்கள்
தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறை.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி கேதீஸ்வரி சிறிகாந்தன்**
அவர்களின் அன்புத் மாமியார்

அமரர்

## கமலாதேவி நவரட்ணம்

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7020)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு எப்போதும் ஆதரவாக இருப்போம்

## ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை



(கொழும்பு)

**இலங்கை உள்ளிட்ட உலகளவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களது உறவுகளுக்கு ஆதரவாக இருப்போம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தைமுன்னிட்டுநேற்றுவெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர்இதனை தெரிவித்துள்ளார்.

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளும் முயற்சியில் அவர்கள் நம்பிக்கை மற்றும் விரக்திக்கு மத்தியில் காத்திருக்கின்றனர்.

சில நேரங்களில் பல ஆண்டுகளாக, தங்கள் அன்புக்குரியவர்கள் இருக்கும் இடம் பற்றிய செய்திகளுக்காக உறவினர்களும் குடும்பமும் காத்திருப்பதாகவும் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை உண்மையை கண்டறிவதற்கான தேடல் அவர்களை ஆபத்துக்குள்ளாக்கும் என குறிப்பிட்ட அவர், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் நண்பர்களும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்திருக்கின்றனர்.

குறிப்பாக குறித்த போராட்டத்தில் பெரும்பாலும் பெண்களே ஈடுபடும் நிலையில் அவர்கள் மிரட்டல், துன்புறுத்தல் மற்றும் பழிவாங்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது.

பாதுகாப்பின்மை உணர்வு காணாமல்போனவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் சமூகங்கள் மற்றும்அனைத்து சமுதாயத்தையும் பாதிக்கிறது என்றும் ஹனா சிங்கர் தெரிவித்தார். (நி-5)

# கொவிட் அறிகுறிகள் தென்பட்டால் மக்கள் செய்ய வேண்டியவை என்ன?

## தெளிவுபடுத்துகிறார் சுகாதார வைத்திய அதிகாரி

(நெளுக்குளம்)

கொவிட் தொற்றை ஏற்றுக் கொள்ளும் மனநிலையும் ஆபத்தை தவிர்த்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வு ஒன்றினையும் மக்களுக்கான வேண்டுகோள் ஒன்றினையும் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வி.திலீபன் விடுத்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களில் யாருக்காவது காய்ச்சல், இருமல், தடிமன், தலைவலி, உடல்வலி என்பன இருப்பின் கொவிட் நோயாக இருக்க கூடுதலாக வாய்ப்புள்ளது என்பதை முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள்.

மழையில் நனைந்த சளிக் காய்ச்சல், ஐஸ் கிறீம் குடித்து வந்த காய்ச்சல், நிறைய வேலை செய்ததால் உடல் சோர்வில் வந்த காய்ச்சல் என்று உங்களை நீங்களே ஏமாற்றுவதுடன் தயவுசெய்து எங்களை தொடர்பு கொண்டு என்ன மருந்து போடலாம் என கேட்காதீர்கள்.

நீங்கள் அலட்சியமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் உங்களிற்கு ஆபத்தானது என்பதை உணருங்கள்.

எனவே நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

1. ஏதும் கொவிட் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக கொவிட் நோயாக இருக்கலாம் என்பதை முதலில் உணர்ந்து அதனை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள். கொவிட் யாருக்குமே வரலாம். தீண்டத்தகாத நோயோ அல்லது மறைக்கப்பட வேண்டிய நோயோ அல்ல.

2.உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று அன்ரிஜென் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்.

3.அங்கு உங்களிற்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் வைத்தியர்கள் உங்கள் குருதியில் உள்ள ஒட்சிசனின் அளவை அளந்து அதனடிப்படையில் உங்களை வீட்டிற்கு அனுப்பி home based care இல் வைத்திருக்க முடியுமா அல்லது கொவிட் தடுப்பு நிலையம் (step down hospital) ஒன்றில் வைத்து உங்களை நாளாந்தம் அவதானிக்க வேண்டுமா அல்லது உடனடியாக வைத்திய சாலையில் அனுமதித்து சிகிச்சையளிக்க வேண்டுமா என்பதை தீர்மானிப்பார்கள்.

எனவே, தாமதிக்காதீர்கள். நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு நீங்களே வெட்டிக் கொள்ளும் சவக் கிடங்கு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் என தெரிவித்தார். (7-4-6-299)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவது குறித்து கல்வி அமைச்சு அவதானம்

(கொழும்பு)

2020 ஆம்ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரண பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவது குறித்து கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

செயன்முறை பரீட்சைகளை தவிர்த்து வெளியிட தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சுக்கும் பரீட்சைகள் திணைக்களத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

622,000 மாணவர்களில், 170,000இற்கும் குறைவான மாணவர்களே, சங்கீதம், நடனம் மற்றும் சித்திரம் போன்ற செயன்முறை பரீட்சைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை தாமதப்படுத்துவது, எதிர்வரும் பரீட்சைகளை நடத்துகின்றமை மற்றும் பெறுபேறுகளை வெளியிடுகின்றமை ஆகிய நடவடிக்கைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களின் செயன்முறை பரீட்சை பெறுபேறுகள் அத்தியாவசியம் என்றால், அந்த மாணவர்கள், பாடசாலை மட்டத்தில் செயன்முறை பரீட்சையின் ஊடாக பெற்றுக்கொண்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பெறுபேறுகளை வெளியிட முடியும் என கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சைகள் நிறைவு பெற்று, 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில், பரீட்சை பெறுபேறுகளை தாமதமின்றி வெளியிடுவதற்கு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படுகின்றமையினால், உயர்தர கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப் படுவதை கருத்திற் கொண்டே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## சேவையிலுள்ள அதிபர், ஆசிரியர்களுக்கான கற்கை நெறிகள் அறிமுகம்

(கொழும்பு)

தற்போது சேவையில் உள்ள அதிபர், ஆசிரியர், இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு கல்வி முகாமைத்துவ முதுமாணி, கல்வி முகாமைத்துவ கல்விமாணி ஆகிய இரு பட்டக்கற்கைகளை தேசிய கல்வி நிறுவகம் அறிமுகம் செய்துள்ளது.

கற்கை நெறிகளை தொடர விரும்புவோர் தமது விண்ணங்களை ஒன்லைன் மூலம் தேசிய கல்வி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கலாம் என்று தேசிய கல்வி நிறுவகம் அறிவித்துள்ளது. (நி-5)

# சீதுவையில் 650 தொன் சீனி சிக்கியது

(கொழும்பு)

நுகர்வோர் விவகார அதிகார சபையில் பதிவு செய்யாமல் சீதுவை பகுதியில் உள்ள இரண்டு களஞ்சியங்களிலிருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் கிலோ கிராம் (650 தொன்) சீனியை நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்று கைப்பற்றியுள்ளது.

இலங்கை விமானப் படை உளவுத்துறைக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, நுகர்வோர் விவகார அதிகார சபை இரண்டு களஞ்சியங்களையும் சோதனையிட்டபோது, இரண்டு களஞ்சியங்களின் முகாமையாளர்கள் கைது செய்யப்பட்டதுடன், சீனியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இரண்டு களஞ்சியங்களுக்கும் சீல் வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-5)



# பரா ஒலிம்பிக் இலங்கை வீரர் உலக சாதனை

ஜப்பானில் நடைபெற்று வரும் 16 ஆவது பராலிம்பிக்கில் ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கை வீரர் தினேஷ் பிரியந்த ஹேரத் உலக சாதனை படைத்து தங்கம் வென்றுள்ளார்.

2016 ரியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான எப். 46 பிரிவின் ஈட்டி எறிதல் போட்டியில் 58.23 மீற்றர் வீசி வெண்கலப்பதக்கம் வென்ற தினேஷ் பிரியன்த இம்முறையும் பதக்கம் வெல்லும் முனைப்புடன் களமிறங்கினார்.

இதற்கமைய, F46 ஈட்டி எறிதல் போட்டியில் கலந்து கொண்ட அவர் 67.79 மீற்றர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து உலக சாதனையை படைத்தார்.

மேலும் தங்கம் வென்று அசத்தியுள்ளார். இதன் மூலம் பராலிம்பிக்கில் இலங்கைக்கு முதல் தங்க மெடலை பெற்று தந்து பெருமை சேர்த்துள்ளார் தினேஷ் பிரியந்த் ஹேரத்.

இந்த போட்டியில் இந்திய வீரர் தேவேந்திரா ஜஜ்ஹரியா வெள்ளியையும் மற்றொரு இந்திய வீரர் சுந்தர் சிங் வெண்கலமும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (4-6)

# இரண்டாவது இருபது - 20 சரணடைந்தது ஜிம்பாவே



ஜிம்பாவே அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 இருபது-20 போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 போட்டியில் 3 ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே வெற்றி பெற்றது.

இந்நிலையில், அயர்லாந்து, ஜிம்பாவே அணிகளுக்கு இடையிலான 2 ஆவது இருபது-20 போட்டி டப்ளினில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் பேட்டிங் செய்தது.

ஜிம்பாவே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 152 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, 153 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது.

இறுதியில், அயர்லாந்து அணி 18.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 153 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் அயர்லாந்து அணி தொடரில் 1-1 என சமனிலை வகிக்கிறது. ஆட்ட நாயகன் விருது கெவின் ஓபிரையனுக்கு அளிக்கப்பட்டது. (4-6)






பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்

72 ஆவது அகவையில்
இன்று (31.08.2021) செவ்வாய்க்கிழமை
தடம்பதிக்கும் பல்துறை சார்ந்த
சமய கலாசார சமூக சேவையாளர்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம
சிறந்த நிர்வாகி
"ஞானதானவள்ளல்"

கலாநிதி சுவாமி
செந்தில்வேல்
மோகனதாஸ் J.P



வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுவதும் தருவோய் நீ
வேண்டும் மக்களுக்கு உயர்ந்து வாழவைப்போய் நீ
வேண்டி என்றும் பணி கொண்ட செந்தில் தாசனே
உங்கள் அன்பும் அருளும் ஆசியையும்
அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் வேண்டுகின்றோம்

Best Wishes

இன்றைய இக்கட்டான நெருக்கடிமிக்க சூழலிலும் சுவாமிஜி ஆற்றிக்கொண்டிருக்கும் பணியை யாராலும் மறக்கவே முடியாது. அவர்கள் இனிய குடும்பத்துடன் நீடூழி நிலைத்து வாழ சந்நிதி முருகன் அருள் பொழிந்துகொண்டே இருப்பான்.

இனிய நெஞ்சங்கள்

(C-2609)

# இராசிபலன்

**31.08.2021**
ஆவணி 15, செவ்வாய்க்கிழமை
நவமி பின்னிரவு 3.45 மணிவரை
ரோகிணி முற்பகல் 10.20 மணிவரை
சுபநேரம் -10.35-12.05 மணிவரை
இராகு காலம் 3.05-4.35 மணிவரை
சந்திராஷ்டமம்- அனுசம்

வளவன்


மேஷம்
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்,வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


ரிஷபம்
எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.


மிதுனம்
யாராவது உங்களிடம் உதவிகேட்டு வரலாம்,சுப விரயங்கள் மேலோங்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


கடகம்
குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்
முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன நன்மையுண்டு.


கன்னி
பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.


துலாம்
பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.


விருச்சிகம்
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.


தனுசு
இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், ஆரோக்கியமான நாள், கௌரவமான நாள்.


மகரம்
வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம்.


கும்பம்
எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்
பணப்புழக்கம் அதிகமானாலும் திடீர் விரயங்களும் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு.

எதையும் இழக்காமல் இந்த உலகத்தில் எதுவும் வளருவதில்லை.

# பயிர் செய்கைக்கு குளத்தினை புனரமைவுங்கள்

## கமக்கார அமைப்புகள் கோரிக்கை

(கண்டாவளை)

வட்டக்கச்சி கமநலசேவை திணைக்களத்தின் கீழ் உள்ளகல்மடு வில்லுக்குளம் கடந்த1955 ஆண்டு குடியேற்றத்தின் பின் இதுவரைகாலமும் புனரமைக்கப்பட வில்லை. குளத்தில் தற்பொழுது பாரிய மரங்கள் வளர்ந்துள்ளதுடன் கல்மடுக்குளத்தில் இருந்து பெறப்படுகின்ற நீரின் மூலம் சுமார் 75 ஏக்கர் விவசாய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் தற்பொழுது குளத்தில் அணைக்கட்டுப்பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன் பிரதான கால்வாய் களும் அழிவடைந்தும் காணப்படுகின்றது இக்குளம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து இக் குளத்தினை புனரமைத்து தருமாறு இப்பகுதி கமக்கார அமைப்புகள் வேண்டி நிற்கின்றனர். (7-4-6-316)

## யானை தாக்கியதில் ஒருவர் காயம்

(கண்டாவளை)

இரணைமடு பகுதியில் நேற்று யானை தாக்கிஒருவர் காயமடைந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரணைமடுகுளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களிடம் மீன் கொள்வன விற்காகச்சென்ற வரையே யானை தாக்கியுள்ளது.

வியாபாரத்திற்காக சைக்கிளில் மீன் கொள்வனவு செய்ய சென்ற பொழுது காட்டருகில் நின்ற யானை துவிச்சக்கர வண்டியை இழுக்க முற்பட்டுள்ளது. இதன்போது தவறி விழுந்த குறித்த நபர் சிறுகாயங்களிற்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த யானை வெடிகொழுத்தி காட்டுப்பகுதிக்கு துரத்திவிடப்பட்டுள்ளது. (7-4-6-316)


# கண்ணீர் அஞ்சலி

திருமதி **சதாசிவம் கனகமணி**
(ஓய்வு பெற்ற அதிபர்)



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி.ரூபகௌரி யதனராசா
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சதாசிவம் கனகமணி**
(ஓய்வு பெற்ற அதிபர்)
30.08.2021 நேற்று
இறைவனடி சேர்ந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபத்தை
தெரிவித்துக்
கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயருடன்
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்


# விலைக் கேள்விக்கான கோரல் - திருத்தங்கள்
## சமைத்த உணவு வழங்கல் - 2021 / 2022
## மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம்.

1. வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுக்களின் (PDPC) தலைவர் ஆகஸ்ட் 19 ம் திகதி அன்று வலம்புரியில் பிரசுரிக்கப்பட்ட சமைத்த உணவு வழங்கல் 2021/ 2022 விலைக் கேள்விக்கான கோரலில் கீழ்வரும் மாற்றங்களை வழங்குகிறார்கள். ஏனைய தகவல்கள் மாற்றமின்றி தொடரும்.

| | | |
|---|---|---|
| சமைத்த உணவு வழங்கல் | கேள்வி ஆவணம் வழங்கும்/ பெற்றுக் கொள்ளும் காலம் | 20.08.2021 முதல் 09.09.2021 வரை |
| | முதற்பெறுகை கூட்டம் | 07.09.2021 மு.ப 10.30 |
| | கேள்வி மூடுதல்/ திறத்தல் | 10.09.2021 மு.ப 10.30 |
| கேள்விப் பிணை தேவைப்படும் காலம் - அனைத்து வைத்தியசாலைகளிற்கும் | வரை 23.12.2021 | |

தலைவர்
மாகாண திணைக்களப் பெறுகைக் குழுக்கள்
மாகாண சுதேச மருத்துவ திணைக்களம்
வடமாகாணம்
இல 611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசிஇல - 021 222 0824
தொலைநகல் - 021 222 0822

(அ-2594)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் DR.நாகரெத்தினம் விமலகாந்தன்
(யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் சிரேஷ்ட வைத்தியதிகாரியும், உளநலப் பிரிவு
ஆர்யோவேதய யாழ். சொகபைக போட்டார் வைகைப் பிரிவு
வைத்திய அதிகாரியும்) அவர்கள்
இம் மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள்
மனதைவிட்டு மறவாத குடும்ப
நண்பனின் மறைவை ஒட்டி
ஆழ்ந்த துயரத்துடன் . இருக்கும்
குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
விக்ன விநாயகனை வேண்டுகிறோம்.

(2824)

பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்

க.கை.விக்னேஸ்வரன் (விக்னா)
ஓய்வுநிலை இலங்கை வங்கியாளர்.
குடும்பத்தினர்

# இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள்
## பயனாளிகளிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

தேசிய வெசாக் தினத்தை முன்னிட்டு புத்தசாசன அமைச்சினால் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக யாழ் ப்பாண மாவட்டத்தில் நான்கு வீடுகள் அமைத்துக் கொடுப் பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இராணுவத்தினரால் வீடு கட்டுமான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருந்த தேசிய வெசாக் தினத்தன்று வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட இருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அசாதாரண நிலை காரணமாக நேற்றைய தினம் உடுவில் மற்றும் கீரிமலை பகுதிகளில் அமைக்கப்பட்ட வீடுகள் இரண்டு யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியினால் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த வீடு கையளிக்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு பலாலி இராணுவ கட்டளைத் தலைமை இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். (4-7-33-104)



கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையம்யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் நடத்திய வருடாந்த மாபெரும் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கி ழமை கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்திற்கு அரு கில் இடம் பெற்றது. (படம்:-ரவிசாந்)

# நாவலர் கலாசார மண்டபத்தை புனரமைக்க நடவடிக்கை



(குப்பிழான்)
நாவலர் கலாசார மண்டபம் யாழ்.மாநகர சபையால் சரியாகப் பராமரிக்கப்படவில்லை எனவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளிக்க வேண்டும் எனவும் பல்வேறு கருத்துக்கள், கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆகியோர் கடந்த சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

நாவலர் கலாசார மண்டபம் புனரமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. எனவே, குறித்த மண்டபத்தைச் சிறப்பாகப் புனரமைத்து அதன் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்ய உடனடி நடவடிக்கைகள்எடுக்கப்படும் எனயாழ் மாநகர முதல்வர் தெரிவித்தார்.(4-7-18)



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்-19 தடுப்பூசியின் முதலாவது டோஸ் பெற்றுக் கொண்டவர்களுக்கான இரண்டாவது டோஸ் வழங்கும் பணி நேற்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது. (படம்:-சிவசாந்தன், ரவிசாந்)




## எம் துயரைத் துடைத்து விடு

அலங்காரக் கந்தனே! ஆனந்த மயில்வாகனனே!
அடியவர்கள் கலி தீர்க்கும் கலியுக வரதனே!
பிரணவத்தின் பொருள் தந்த சிவசேயோனே
பிரணவாயுக்காய் பரிதவிக்கின்றோம் பார் ஐயனே
ஐந்தொழிலை நிகழ்த்திவிடு உன்னுற்சவத்தினால்
எம் துயரைத் துடைத்துவிடு உன் பலத்தினால்.

சிவராஜா கிரிதரன்
ஓட்டுமடம், வீதியாழ்ப்பாணம்

## உந்தன் பாதம் மறவாமல் எம் இல்லங்களில் துதிக்கும் அடியார்கள் கவலை போக்கிடப்பா

நாதமே ஒலியான நல்லூர்க் கந்தா
நாரியிருவர் மருங்கிலணை மால் மருகா-நிதம்
கீதமாய் ஒலித்திடுமேயுன்தன் அநுபூதி-பண்கலந்து
பாடிடும் மணிவாசகம் பக்தர் உளந்தனை
உருக்கிடுமே பன்னிருகை வேலவா!
வாழும் இக்கொடிய வினை-எம்பதியில்
அழிந்திடவே-உன்தன் பாதங்கள்
மறவாமல் இல்லங்களில் துதிக்கும்
அடியார்கள் கவலை தனை போக்கிடப்பா

ப.பாலசுப்பிரமணியம்
வேலணை பாலா ஜே.பி

## சிங்கார வேலவனே எம் சிந்தையில் அமர்வாய்

சங்கரன் புதல்வனே சண்முக வடவேலவனே
சாந்த சொரூபனே எமை சான்றோன் ஆக்கிடுவாய்
சிங்கார வேலவனே எம் சிந்தையில் அமர்வாய்
சீரிய வாழ்வினை சிறப்புடன் தருவாய்
சுந்தரி மணாளனே சுட்ட பழம் அளித்தவனே
சூரனை சங்காரம் செய்த ஐங்கரன் சோதரனே
செந்தமிழ்க் குமரனே செந்தில் வடிவேலவனே
சேயோனே மயோன் மருமகனே
சொக்கன் மகனே சொர்ண மயில் வாகனனே
சோலை மயில் மீதமர்ந்து உலகை வலம் வந்தவனே
சௌபாக்கியம் அளித்திடுவாய் சௌந்தரி பாலகனே

சி.மகாலட்சுமி
கொக்குவில்

## மயிலேறி வா முருகா வா

மன்றாடும் நாயகனின் மைந்தனே மயிலேறிவா
குன்றாடும் குமரா குறையேது நாம் செய்தோம் வா
வென்றாடி அன்று தேவர் குறை தீர்த்தவனே வா
மன்றாடி நிற்கின்றோம் மஞ்ஞை அதில் ஓடிவா
வஞ்சியர் இருவரோடு தனித்து வலம் வருபவனே வா
தஞ்சம் என்று நாம் வந்து காத்து நிற்கின்றோம் வா
பஞ்சம் பசியென்றால் தாங்கிடலாம் பாழாய்ப்போன
நோய் தாங்க முடியவில்லை வா
வெஞ்சினம் கொண்டு மஞ்சமதில் ஓடோடி வா

வேம்படி விக்கி
பிறவுண் றோட்

UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
STATE MINISTRY OF SKILLS DEVELOPMENT, VOCATIONAL TRAINING, RESEARCH & INNOVATIONS

VACANCIES

TVEC Reg No: P25/0071
Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna

1. LECTURER (PROBATIONARY) IN COSMETOLOGY
2. DEMONSTRATOR IN BUILDING SERVICES TECHNOLOGY

Closing Date: 15.09.2021

FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

Assistant Registrar
University College of Jaffna

31.08.2021 (C-2596)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டியுடர் குணசேகர உயிரிழப்பு

(கொழும்பு)

போலந்து நாட்டிற்கான முதலாவது இலங்கை தூதுவராக கடமையாற்றிய டியூடர் குணசேகர, கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

அவர் 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## நலமும் வளமும் தரும் விநாயகர் சதுர்த்தி



### இலாபம் தரும் பிள்ளை யார்

மண்ணால் செய்த பிள்ளையாரை வழிபட்டால் நற்பதவி கிடைக்கும்.

புற்று மண்ணால் உருவாக்கிய பிள்ளையாரை வணங்கி வழிபட வியாபார லாபம் கிடைக்கும்.

உப்பினால் உருவான விநாயகரை வணங்கிட எதிரிகள் அழிந்து நிம்மதி பிறக்கும்.

கல்லால் அமைந்த விநாயகரை வணங்கிட வெற்றி கிட்டும்.

வெள்ளெருக்கால் செய்த பிள்ளை யாரை வழிபட செல்வம் சேர்ந்து மகிழ்ச்சி நிலவும்.

மஞ்சள் பொடியால் ஆன பிள்ளையாரை வழிபட சகல காரியங்களும் நன்றாக நடக்கும்.

வெல்லத்தினால் செய்யப்பட்ட பிள்ளையாரை வழிபட வாழ்வு வளம் பெறும்.

பசுஞ்சாணியால் உருவாக்கப்பட்ட பிள்ளையாரை வழிபட வியாதிகள் நீங்கி வளம் பிறக்கும்.

### ஐந்து தொழில்கள்

முழுமுதற் கடவுளான விநாயகர் அனைத்து உயிர்களையும் படைக்கும் கடவுளாகவும் விளங்குகிறார். எலியை வாகனமாக கொண்டு மிகப் பெரிய படைப்பான யானைத் தலையுடன் அவர் விளங்குவது விநாயகரே அனைத்து உயிர்களையும் படைக் கிறார் என்பதை குறிக்கிறது. விநாயகர் ஐந்து தொழில்களையும் நிறைவேற்றுகிறார்.

பாசம் ஏந்திய கை படைத் தலையும், தந்தம் ஏந்திய கை காத்தலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் ஏந்திய கை அருளையும் உணர்த்துகின்றன.

(தொடரும்)

University College of Jaffna
University of Vocational Technology
State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovations
UNIVOTEC

Applications are open for the following Courses

★ Construction Technology
★ Building Services Technology
★ Mechatronics Technology
★ Production Technology
★ Farm Machinery Technology
★ Food Technology
★ Hospitality Management
★ Cosmetology ( Beauty Culture )

Closing Date 17th September 2021

Entry Qualifications
GCE A/L qualified or NVQ 4

TVEC Approved

Career Path : A/L or NVQ 4 → University College: NVQ 5/ Diploma → NVQ 6/ HND → UNIVOTEC NVQ 7/ Degree

For more details
University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.ac.lk
E-mail: info@ucj.ac.lk
Telephone: 021-221-7791 or 021-221-7792

Application forms can be dowloaded from the website

Please pay the application Fee Rs. 500 to this account no
(Peoples Bank 162 - 100100045947) and attach the bank receipt with application

(C-2597)

# சர்வதேச நாணய நிதிய வளங்களை பயன்படுத்துமாறு அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார செயல்திறனை, மேம்படுத்திக் கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் கருவிகளைப் பயனபடுத்திக் கொள்ளுமாறும் அமெரிக்கா, மீண்டும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைய்னா பி.டெப்லிட்ஸ் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

கொழும்பின் ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த செவ்வியில் மேலும், உறுதியான பொருளாதார அடித்தளத்தை உருவாக்கும் மாற்றங்களில், இலங்கை ஈடுபடவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை உயர்தர முதலீட்டாளர்களை ஈர்க்க விரும்புவதை தாம் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இலங்கையின் பொருளாதாரம், தற்போது சிறந்த ஆரோக்கிய நிலையில் இல்லை.

இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியம், வழங்கிய வளங்களைப் பயன்படுத்துவதே தீர்வுக்கு வழிவகுக்கும் என்று தாம் நம்புவதாகவும் அமெரிக்க தூதுவர் அலைய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கை- இந்தியா இடையே விமான சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே சாதாரண விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

புதிய அட்டவணையின் கீழ், மும்பை, சென்னை மற்றும் பெங்களூருக்கு வாரத்திற்கு 4 விமானப் பயணங்களை செயற்படுத்தவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதேபோல், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம் மற்றும் கொச்சிஇடையே வாராந்திர விமானங்களும் இயக்குவதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஹைதராபாத், புதுடெல்லி மற்றும் கொழும்புக்கு இடையே இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விமானங்கள் இயக்கப்படும் எனவும் பயணிகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# காபூல் விமான நிலையத்தை குறிவைத்து

## ராக்கெட் தாக்குதல்; பலித்தது பிடனின் எச்சரிக்கை

(காபூல்)

**ராக்கெட் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 6 பேர் கொல்லப்பட்டதாகவும், ஒரு பெண் உட்பட 3 பேர் படுகாயம் அடைந்ததாகவும் காபூலை சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

அடுத்த 24 மணி நேரத்தில் இருந்து 36 மணி நேரத்துக்குள் காபூல் விமான நிலையத்தில் மற்றுமொரு பயங்கரவாத தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் எச்சரித்திருந்தார்.

ஜோ பிடன் எச்சரித்தபடியே மற்றுமொரு பயங்கரவாத தாக்குதல் காபூல் விமான நிலையத்தை நேற்று முன்தினம் அதிரவைத்தது. நேற்று முன்தினம் மாலையில் காபூல் விமான நிலையத்தை குறிவைத்து பயங்கரவாதிகள் ராக்கெட் குண்டை வீசினர்.

இந்த ராக்கெட் தனது இலக்கான காபூல் விமான நிலையத்தை தாக்குவதற்கு பதிலாக விமான நிலையத்தின் வடக்கு பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதியில் விழுந்தது. நெரிசலான பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது ராக்கெட் விழுந்து வெடித்து சிதறியது.

இந்த ராக்கெட் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 6 பேர் கொல்லப்பட்டதாகவும், ஒரு பெண் உட்பட 3 பேர் படுகாயம் அடைந்ததாகவும் காபுலை சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே பயங்கரவாதிகளின் ராக்கெட் தாக்குதல் குறித்த செய்தி வெளியான சிறிது நேரத்தில் காபூல் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்துவதற்காக காரில் சென்று கொண்டிருந்த தற்கொலை படை பயங்கரவாதிகளை டிரோன் தாக்குதல் நடத்தி கொன்றதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (7-4)

# 500,000 ஆப்கானியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவர்

## ஐ.நா அகதிகள் ஆணையகம் சுட்டிக்காட்டு

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் நிச்சயமற்ற தன்மை காரணமாக அடுத்த நான்கு மாதங்களில் 5 லட்சம் ஆப்கானியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவார்கள் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் பெருமளவிலான இடம்பெயர்வுகள் ஆப்கானிஸ்தானில் ஏற்படவில்லை. காபுலிலிருந்தே மக்கள் வெளியேறுகின்றனர்.

ஏனைய பகுதிகளில் பாரியளவிலான இடம்பெயர்வுகள் இல்லை, ஆனால் தற்போது வளர்ந்து வரும் சூழ்நிலைகள் ஏராளமான மக்கள் நாட்டை விட்டு வெளியேற வழிவகுக்கும் என்று துணை உயர் ஆணையாளர் கெல்லி டி கிளெமெண்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆப்கானிஸ்தான் அகதிகளுக்காக அண்டை நாடுகள் தங்கள் எல்லைகளை திறந்து வைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை உலக உணவுத் திட்டம் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆப்கானியர்களுக்குத் தேவையான உணவு வழங்க 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-4)

# ஆப்கானில் குழந்தைகளின் நிலை மிக மோசம்

## யுனிசெஃப் தகவல்

(காபுல்)

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பிறகு அங்கு அசாதாரண சூழ்நிலை நிலவி வருகிறது. ஆப்கானை விட்டு மக்கள் பலரும் வெளியேறும் முனைப்பில் உள்ளனர். தங்கள் நாட்டினரை மீட்கும் பணியிலும் பல்வேறு நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் குழந்தைகளின் நிலை மோசமாக இருப்பதாக ஐ.நா. குழந்தைகள் நிதியம் தெரிவித்துள்ளது.

யுனிசெஃப் தெற்காசியாவின் இயக்குனர் ஜார்ஜ் லாரியா-அட்ஜே கூறியதாவது:

பாதுகாப்பு நெருக்கடி, உணவுப் பொருட்கள் விலை உயர்வு, கடுமையான வறட்சி, கொரோனா பரவுதல் மற்றும் கடுமையான குளிர்காலம் உள்ளிட்ட காரணிகளால் குழந்தைகள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் ஆபத்தில் இருக்கின்றனர்.

போலியோ, டெட்டானஸ் மற்றும் பிற நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு அங்கு இல்லாமல் உள்ளது.

தற்போதைய போக்கு தொடர்ந்தால், ஆப்கானிஸ்தானில் ஐந்து வயதுக்குட்பட்ட 10 லட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அதுபோன்று 22 லட்சம் பெண் குழந்தைகள் உட்பட 40 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் பள்ளி படிப்பை தொடர முடியாத நிலை ஏற்படும் என்றும் கணித்துள்ளது. (7-4)

# காபூல் விமான நிலையம் தலிபான்களால் மூடப்பட்டது

(காபுல்)

நேட்டோவின் இறுதி விமானங்கள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியுள்ள நிலையில், நாட்டை விட்டு பெருந்திரளான மக்கள் வெளியேறுவதை தடுக்கும் வகையில் தலிபான்கள் காபுல் விமான நிலையத்தை மூடி சீல் வைத்துள்ளனர்.

ஓகஸ்ட் 31 காலக்கெடுவை முன்னிட்டு அமெரிக்கா தலைமையிலான பாரிய விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அகதிகளை வெளியேற்றும் இத்தாலியின் இறுதி விமானம் ரோம் லியோனார்டோ டா வின்சி விமான நிலையத்தில் தரையிறங்கியது. இத்தாலிய விமானப் படையின் சி-130 ஜே ரக விமானம் 58 ஆப்கானிஸ்தான் குடிமக்களுடன் கடந்த சனிக்கிழமை காலை, காபுல் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் வெளியேறும் கடைசி விமானங்களில் தப்பிக்க தீவிர முயற்சிகளில் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்கள் விமான நிலையத்தின் எல்லைக்கு வெளியே முகாமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# 3 ஆவது டோஸை வழங்கிய இஸ்ரேல்

(ஜெருசலேம்)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வேண்டுகோளையும் மீறி தனது நாட்டுப் பிரஜைகளுக்கு கொரோனா தடுப்பூசியின் 3 ஆவது டோஸை இஸ்ரேல் வழங்க ஆரம்பித்துள்ளது.

வறிய நாடுகளையும் ஏனைய மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்குதலை கருத்திற்கொண்டு மூன்றாவது டோஸை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு, முன்னதாகவே உலக சுகாதார ஸ்தாபனம் உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

மேலும் இஸ்ரேல், ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் தற்போது மூன்றாவது டோஸை வழங்க ஆரம்பித்துள்ளது.

பணக்கார நாடுகள் இவ்வாறு மூன்றாவது தடுப்பூசியை செலுத்துவது என்பது வறிய நாடுகளுக்கு கிடைக்கப்பெறும் தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறையை ஏற்படுத்துபவையாக இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்திருந்தது. இந்நிலையில், இஸ்ரேல் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வேண்டுகோளையும் கருத்திலெடுக்காது தனது நாட்டு மக்களில் 12 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# அமேரிக்காவை புரட்டி போட்ட ஐடா சூறாவளி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லூசியானாவில் ஐடா சூறாவளி தாக்கியதால், 7 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சார இணைப்பு தடைப்பட்டுள்ளது.

ஜெனரேட்டர்கள் மட்டுமே வேலை செய்யும் நிலையில், அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் நகரம் இருளில் மூழ்கியுள்ளது.

சென்ற வார இறுதியில் மெக்ஸிகோ வளைகுடாவில் உருவான ஐடா சூறாவளி அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் கரையைக் கடந்துள்ளது.

புயல் கரையை கடக்கும் போது 150MPH (240 கி.மீ மணி) காற்று வீசியது மற்றும் தப்பி ஓடாத மக்கள் அந்த இடத்தில் தங்க வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதே வேளை கடலோரப் பகுதிகளுக்கு அப்பாலும் பெரிய பேரழிவை உண்டாக்கக் கூடிய உயிர் அச்சுறுத்தலாக ஐடா சூறாவளி இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் எச்சரித்திருந்தார். (7-4)

# ஆப்கான் பாடகரை சுட்டு கொன்ற தலிபான்கள்

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் இசைக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே நாட்டுப்புற பாடகர் ஃபவாத் அந்தராபி கொல்லப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன் தினம் தனது வீட்டில் இருந்த போது, அங்கு வந்த தலிபான்கள் அவரை வீட்டிற்குள் இருந்து வெளியே இழுத்து போட்டு தலையில் சுட்டுக்கொன்றனர். இதனை அவரது மகன் உறுதிசெய்தார்.

முன்னதாக கடந்த சில நாட்களுக்கு முன், தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இசைக்கு தடை விதித்து உத்தரவிட்டனர்.

இதுதொடர்பாக, முன்னர் வெளியான தகவலில், இஸ்லாத்தில் இசை தடை செய்யப்பட்டுள்ளது. அதனால், இசைக்கு தடை செய்யப்படுகிறது என கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. (7-4)

# காணமால் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீட்டிலிருந்தவாறு கவனயீர்ப்பு

(பனிக்கன்குளம்)

**சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று சர்வதேசத்திடம் நீதிகோரி முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வீடுகளில் இருந்தவாறே அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.**




முல்லைத்தீவில் தொடர்ச்சியாக நீதிகோரி போராட்டம் மேற்கொண்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொவிட் 19 பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு நிலையால் தத்தமது வீடுகளிலிருந்தபடியே சர்வதேசத்திடம் நீதிகோரி அடையாள கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இன்றைய நாளில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நிலையிலும் தமது வீடுகளில் நீதிகோரிய வாசகங்களை தாங்கி நீதியின் குறியீடாக மெழுகுதிரி ஒளி ஏத்தி சர்வதேச சமூகத்திடம் நீதிகோரி போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

நாங்கள் இலங்கை அரசை நம்பவில்லை சர்வதேச விசாரணையே வேண்டும் , காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வருவது எப்போது?, உங்கள் இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்? கால அவகாசம் வேண்டாம் - முறையான நீதி விசாரணையே வேண்டும் போன்ற வசனங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கி நேற்று சர்வ தேசத்திடம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தை அடையாளப்படுத்தி கவனயீர்ப்பை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தம் முடிவடைந்து 2009 முதல் பன்னிரெண்டு வருடங்களாக தமது உறவுகளை தேடி போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கடந்த 2017 மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் தமது பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறும் அவர்களுக்கான நீதி வேண்டியும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நான்கு வருடங்களை கடந்து 1635 ஆவது நாளாக தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-281)

## “எங்களுடைய பிள்ளைகளோடு இருந்து சாக விடுங்கள்” இதுவே அரசியல் கைதிகளின் பெற்றோரின் நிலைமை

### அருட்தந்தை சக்திவேல் சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

எங்களுடைய பிள்ளைகளோடு இருந்து எங்களை சாக விடுங்கள் என அரசியல் கைதிகளுடைய பெற்றோர்கள் கூறியதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலவரம் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,வயது முதிர்ந்த நிலையிலே பிள்ளைகளின் கவலையோடு இருப்பவர்கள், கொரோனா தொற்றுக்குள்ளாக கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இந்த நிலையில் தான் பெற்றோர் இவ்வாறு கூறுகின்றனர். இந்த ஆதங்கம் அரசாங்கத்திற்கு எட்டப் போவதில்லை. ஏனென்றால் அண்மையிலே ஜனாதிபதி ஒரு குழுவினை அமைத்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக ஒரு குழு அமைத்து அவர்களுடைய ஆலோசனைபெற்று அதன்பின் நிறைவேற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. அவர்களை ஏமாற்றுவதற்காக தான் இந்த குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

எனவே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுகின்ற அதே நேரம், தற்போது இருக்கின்ற சூழ்நிலைக்கு கீழே இவர்கள் விடுதலை செய்வதன் ஊடாக தமிழ் மக்கள் மத்தியிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கலாம் என்று நாங்கள் நினைக்கின்றோம்" என்றார். (7-4-6-299)

## நியாயமான விலைகளில் தானிய விற்பனை இடம்பெற வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் கடந்த சிறுபோகத்தின் போது மேற்கொள்ளப்பட்ட உப உணவுப் பயிர்ச் செய்கையின் அறுவடைகள் நிறைவடைந்துள்ள நிலையில் நியாயமான விலையில் தானியங்களை விற்பனை செய்வதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வவுனிக்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொவிட் 19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ரூபாய் 10,000 உணவுப் பொதிகள் வழங்கப்படும் போது வவுனிக்குளத்தின் உப உணவு உற்பத்திப் பொருட்களான உழுந்து, பயறு, எள்ளு என்பவற்றினை நியாய விலையில் மாவட்டச் செயலகம் பெற்று குறித்த உணவுப் பொதிகளில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் நெல்லினை வவுனிக்குளத்தில் உடனடியாக விற்பனை செய்கின்ற போதிலும் பெறுமதியான உப உணவு தானியங்களுக்கு நியாய விலை கிடைப்பதில் இடர்கள் உள்ளதாகவும் வவுனிக்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (7-4-6-350)

## மாந்தை கிழக்கில் அதிக விலையில் கடல் உணவுகள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் கடல் உணவுகள் அதிகரித்த விலையில் விற்கப்படுவதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேச செயலாளர் பிரிவாக மாந்தை கிழக்கு காணப்படுகின்றது. மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் முல்லைத்தீவு கடலில் பிடிக்கப்படுகின்ற கடல் உணவுகள் மாந்தை கிழக்கிற்கு கொண்டு வரப்படுவதில்லை எனவும் அவ்வாறு கொண்டு வரப்பட்டாலும் அதிக விலையில் விற்கப்படுவதன் காரணமாக பொது மக்களினால் கடல் உணவினைப் பெற்றுக்கொள்ள முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்ரிக் ஜோன்சன் தெரிவிக்கையில்,

தற்போது கடலில் மீன்பிடி குறைவாக உள்ளது. மாந்தை கிழக்கில் கடல் உணவுகளின் விலை அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் முல்லைத்தீவில் இருந்து 100 கிலோ மீற்றர் தூரத்தில் மாந்தை கிழக்கு உள்ளது.

முல்லைத்தீவில் இருந்து மீன் கொண்டு செல்வதில் போக்குவரத்து செலவு உள்ளது. மன்னார், கிளிநொச்சி மீன்கள் மாந்தை கிழக்கிற்கு சென்றாலும் முல்லைத்தீவு மீனையே மாந்தை கிழக்கு மக்கள் விரும்புகின்றனர்.

மாந்தை கிழக்கிற்கான போக்குவரத்துகள் சீராகி முல்லைத்தீவிலும் மீன்களின் விலை குறையுமானால் புதிய பொறிமுறையில் மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளுக்கு முல்லைத்தீவு கடல் உணவுகள் குறைந்த விலை யில் விற்பதற்கான ஏற்பாடுகளை எதிர்காலத்தில் செய்யலாம் எனவும் தெரிவித்தார்.(7-4-6-350)

# தியாகம் செய்யுங்கள் எனக்கோர அரசாங்கத்திற்கு உரிமையில்லை - ரணில்

(கொழும்பு)

**தியாகங்களை செய்ய வேண்டும் என மக்களிடம் கோரிக்கை விடுப்பதற்கு அரசாங்கத்திற்கு எவ்வித உரிமையும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி தெரிவித்த கருத்து குறித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இணையவழி கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த நிபுணர்கள் குழுவை நியமிக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளமையும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இந்த கோரிக்கையை இலங்கையை தவிர்ந்த ஏனைய நாடுகள் நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே, இந்த சூழ்நிலையில் கொரோனாவை கட்டுப்படுத்த நிபுணர்கள் குழுவை நியமிப்பதாக அரசாங்கம் உறுதிமொழியை வழங்க வேண்டும் என்றும் ரணில் தெரிவித்தார். (ஙி-5)

# லொறி குடைசாய்ந்து விபத்து சாரதி படுகாயம்



(ஹற்றன்)

கொழும்பிலிருந்து நுவரெலியா பகுதிக்கு அரிசி ஏற்றிச் சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த லொறி, நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில், ஹற்றன் குடாகம பகுதியில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு, இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் காயமடைந்த லொறியின் சாரதி, பலத்த காயங்களுடன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஙி-5)

# நாட்டில் இதுவரையில் 6,000 சுகாதார பணியாளர்களுக்கு கொவிட்

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் 6 ஆயிரம் சுகாதார பணிக்குழாமினருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளதாக அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்ரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் மாத்திரம் 250 சுகாதார பணியாளர்களுக்கு கொவிட்-19 தொற்றுறுதியானதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஙி-5)



பைசர் தடுப்பூசியின் 150,000 டோஸ்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்துள்ளன.

# தடையை நீக்கியது ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

(கொழும்பு)

இலங்கையர் உட்பட அனைத்து நாட்டினருக்கும் சுற்றுலா விசா வழங்குவதை மீண்டும் ஆரம்பிப்பதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவித்துள்ளது.

அதன்படி வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் முழுமையாக பெற்றிருக்க வேண்டும்.

உலக சுகாதார அமைப்பால் இதுவரை அஷ்ராசெனேகா, மொடர்னா, பைசர், ஜோன்சன் - ஜோன்சன், சினோபார்ம், சினோவேக் ஆகிய கொவிட் தடுப்பூசிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஙி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2393

### மியூரி

முந்தி எங்களுக்குத்தானே ஊசி போடுவாங்கள் இப்போ அவங்கள் ஊசி போட்டுத் திரியுறாங்கள்



### பானுஜன்




பலனை எதிர்பார்க்காமல் இல்லாதவர்களுக்கு உதவி செய்யுங்கள்... நீங்கள் எதிர்பார்க்காத நேரத்தில் அதற்கான பலன் உங்களை வந்தடையும்!

### வரப்பிரியா



என்ன tea ஒரு மாதிரி இருக்கு



பால்மா இல்ல தானே அதான் தேங்காய் பால் புளிஞ்சு விட்டேன்

### ஜெயந்தி



ஏழைக்கு உணவுக்கு தட்டுப்பாடு. பணக்காரனுக்கு உணவுக்கு கட்டுப்பாடு. நவீன உலகில் மனிதன் படும் பாடு இது

### கஸ்தூரி

வாழ்க்கையில் பேஸ்டுக்கு அப்புறம் தான் காபி! ஆனால் கம்பியூட்டரில் காபிக்கு அப்புறம் தான் பேஸ்ட்.



இந்த அரிய தத்துவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்!

### அஸ்விகி



அனலில் இருக்கும் அம்மாவை பற்றிக் கொண்டது ஐஸ்கட்டி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தடுப்பூசி பெற மறுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் தடுப்பூசி பெற மறுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ, மக்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்கு உத்தரவை மீறுவோரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் மட்டும் கோவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்த முடியாது. டெல்டா வைரஸ் மிகவும் அபாயகரமானது. அத்துடன் வேகமாகப் பரவுகின்றது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை நாட்டு மக்களால் மட்டுமே தடுக்க முடியும். அவசரத் தேவை தவிர வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், முகக்கவசம் அணியாதவர்களை நீதிமன்றுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் கொவிட்டை கட்டுப்படுத்த முடியாது.

எனவே ஒவ்வொருவரும் சுய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# நாட்டின் முழுச் சந்தையும் சில திருடர்களின் பிடிக்குள்

## மக்கள் விடுதலை முன்னணி சாடல்

(கொழும்பு)

நாட்டின் முழு சந்தையும் இன்று சில திருடர்களின் ஏகபோகத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் விலைகளை அதிகரிப்பதன் மூலமும், இவர்களை அதிகாரத்திற்கு கொண்டு வர உதவிய மோசடி செய்பவர்களுக்கு அரசாங்கம் நன்மைகளை வழங்கி மக்களை அரசாங்கம் பழி வாங்குகிறது என ஹந்துன்னெத்தி குற்றம் சாட்டியுள்ளார்.

மோசடி மாஃபியாவை திருப்திப்படுத்துவதற்கு பதிலாக, அரசாங்கம் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், மற்றும் மக்களுக்கு நிவாரணம் வழங்க வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.

பொருட்களின் விலையை அதிகரிக்கும் போது அரசாங்கம் இந்த வறிய மனிதர்களை நினைவில் கொள்ளவில்லை

உள்ளூர் விவசாயியைப் பற்றி பேசும் போது, உரப் பிரச்சினை எழுந்த போது விவசாய அமைச்சருக்கு கொரோனா தொற்றியது.

எண்ணெய் விலை உயரும் போது பெற்றோலிய அமைச்சர் பல்வேறு வாதங்களை முன் வைத்தார் என்றும், பின்னர் அவருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டது. தற்போது, வர்த்தக அமைச்சர்



பொருட்களின் விலை தொடர்பான பல்வேறு வாதங்களை தள்ளி வைத்து விட்டு, யார் வேண்டுமானாலும் சதொச சவில் இருந்து பொருட்களை வாங்க முடியும் என்று வாதிட்டார், இறுதியாக அவருக்கும் கொரோனா தொற்றியது என்று அவர் தெரிவித்தார். (நி-5)

# கொழும்பில் ஒரு லட்சத்தை நெருங்கும் தொற்றாளர்கள் எண்ணிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்று பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ஆரம்பம் முதல் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகூடிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

நேற்று முன் தினம் வரையான நாட்களில் அதிகூடிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் இதுவரையில் 96,454 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

அவர்களில் 64,157 பேர் கொரோனா மூன்றாவது அலையில் தொற்று உறுதியானோர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எகிப்து பிரமிடுகள்

ஒரு நண்பன் கூட பீச்சுக்குப் போனேன். என்னை விட அவர் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கக் கூடியவர். எப்போதும் துறுதுறு என்று எதையாவது செய்துக்கொண்டு இருப்பார். அப்போதும் அப்படி தான். அவருடைய வாய்த் தான் என்கிட்டே பேசிக்கொண்டிருந்தது. கை, மணலை முட்டாகுமிச்சி கோபுரம் மாதிரி செய்துக் கொண்டிருந்தது.

கோடைவிடுமுறையிலே குடும்பங்கள் ஊருக்கு போயிருக்கிறது என்றாலே வீட்டிலே தனியாக இருக்கப் பிடிக்காத பல பேர் வீட்டை பூட்டிக்கொண்டு இப்படி பீச்சுக்கு வந்து உட்கார்வது உண்டு. எங்களை மாதிரியே! எங்கள் இரண்டு பேருக்கும் வீடு பக்கத்துப் பக்கத்திலே!

என்னங்க செய்துக்கொண்டிருக்கீறிங்கள் மணலிலே? என்று கேட்டேன். பிரமிடு கட்டிக்கொண்டு இருக்கின்றேன் என்றார். நீங்கள் எகிப்திலே பிறக்க வேண்டிய ஆள் சேர்! என்றேன். ஏன்? என்றார். அங்கே தான் 4 ஆயிரம் வருடத்திற்கு முன்னாடியே நைல் நதிக்கரை ஓரமாக பிரம்மாண்டமாக பிரமிடுகள் எல்லாம் கட்டி வைத்திருந்தார்கள். என்றேன்.

அந்த நாட்டு ராஜாக்கள் எல்லாம் செத்துப் போனால் அவர்களுடைய உடம்பை இந்த பிரமிடுக்குள்ளே பாதுகாப்பாக வைத்திடுவார்கள். எப்பயாவது ஒரு நாள் அவர்களுக்கு உயிர் வந்து எழுந்திருச்சுவார்கள் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. இது என்ன மூட நம்பிக்கை ? என்று தான் தோணுகிறது.

ஆனால் இந்த பிரமிடுகளை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்து பார்க்கிறவர்கள் மூக்கு மேலே விரலை வைக்கிறார்கள். அதிலே நிறைய விடயம் இருக்கு என்று சொல்கிறார்கள். ராஜா செத்துப் போனால் அவரை மட்டும் உள்ளே வைக்கிறது இல்லை. ஏராளமான நகை, அடிமைகள், குதிரைகள் எல்லாவற்றையும் உயிரோடு வைத்து மூடியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

சரி இதையெல்லாம் உண்மையா இருக்குமா என்று தெரிந்துக்கொள்ளுவதற்காக சில பேர் துணிந்து அதை உடைத்துக் கொண்டு உள்ளே போயிருக்கிறார்கள். உள்ளே போய் பார்த்தால் மன்னர்கள் உடம்பை எல்லாம் பதப்படுத்தி தங்கப்பெட்டிகளிலே வைத்திருந்தார்கள். பக்கத்திலே ராஜாவோடு வேலைக்காரங்கள், குதிரைகள் எல்லோரும் எலும்புக் கூடாக இருக்கிறாங்கள்.

ஜான்வில்சன் என்று ஒரு ஆராய்ச்சியாளர். பிரமிடுக்குள்ளே ஏராளமான விஞ்ஞான உண்மைகள் இருக்கு என்றார். உலக உருண்டையோட நீள அகலத்தை அடிப்படையாக வைத்து கணித சாஸ்திர நிபுணர்கள் தான் இந்த பிரமிடுகளைக் கட்டியிருக்க வேண்டும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதற்குள்ளே உடம்பை வைத்தா ரொம்ப காலத்திற்கு அது அழியாமல் இருக்கும். கால்டாக்டர் பால் அப்படி என்று ஒரு ரேடியோ என்ஜினியர் பிரமிட் நீள- அகல அடிப்படையிலேயே சின்னதாக ஒரு ஆறு அங்குல உயரத்திலே ஒரு கார்ட்போர்டு மொடல் பிரமிடு செய்தார்.

அதனுடைய தென்துருவம் – வடதுருவம் இதனுடைய கோணங்களை சரியாக பார்த்து அந்த திசையிலே வைத்தார். இப்போது அந்த சின்ன பிரமிட்டுக்குக் கூட சக்தியை அதிகப்படுத்திக்கின்ற ஆற்றல் வந்துவிடுகிறது. அதை நிரூபிப்பதற்கு ஒரு ஷேவிங் பிளேடை அதற்குள்ளே வைத்தார். அதை எடுத்து முகச்சவரம் செய்தார். மறுபடியும் அதற்குள்ளே வைத்தார். சாதரணமாக மூன்று அல்லது நாலு தடவை தான் அந்த பிளேடாலே ஷேவ் செய்ய முடியும்.

ஆனால் இந்த பிரமிட் மொடலுக்குள்ளே வைத்து எடுக்கிற பிளேடு 100 தடவை பிரமாதமாக ஷேவ் பண்ணுதாம். கார்த்தி குரோகில் என்று ஒருத்தர். பிரமிட் உள்ளே வைக்கிற பொருளோடு விஷத்தன்மையை அது மாத்திவிடுது என்றார். நிருபித்தும் காட்டினார். காப்பியை அதுக்குள்ளே 20 நிமிடம் வைத்தார். அப்புறம் அதை எடுத்து பரிசோதனை செய்து பார்த்தார். காப்பி என்கிற விஷத்தன்மை முழுதா குறைந்திருந்தது. ஆச்சிரியப் பட்டு போயிருந்தார்.

இன்னொரு ஆராய்ச்சியாளர் அல்பஸ்டர் என்று பெயர். ஒரு ராத்திரி பூராகவும் எகிப்திலே உள்ள பிரமிடுக்குள்ளே போய் தங்கி இருந்து பார்த்தால் என்ன? என்று யோசித்தார். அப்படியே ஒரு நாள் துணிந்து உள்ளே போயிட்டார். சுத்தமா மூடிப்பட்டது. சின்ன துவாரம் கூட இல்லை. உள்ளே ஒரே இருட்டு. கொஞ்சம் நேரம் இருந்தார். ரொம்பப் போராடியாடி ஒரு மெழுகுவர்த்தியை கொளுத்தினார்.

தன்னிடம் இருந்த ஒரு லெட்டரை எடுத்து சும்மா படித்துக்கொண்டு இருந்தார். அப்போது தற்செயலாக மெழுகுவர்த்தி அணைந்து விட்டது. அப்போது ஒரு ஆச்சரியம். அவர் இருந்த இடத்திலே லேசா வெளிச்சம் இருந்துக்கொண்டு இருந்தாம். அந்த வெளிச்சத்திலே லெட்டரை பார்த்தார். எழுத்தெல்லாம் முன்பு இருந்ததை விட தெளிவாக தெரிந்தது.

மெழுகுவர்த்தியாலே உண்டாக்கப்பட்ட வெளிச்சம் மெழுகுவர்த்தி அணைந்ததுக்கு பிறகும் நிலைத்து நிற்கிறது என்றால் அதற்கு காரணம் பிரமிடு கட்டியிருக்கிற அமைப்பு தான் என்கிறார் அவர். 1975 ல் அமெரிக்காவில் ஹவுஸ்டன் என்கிற இடத்திலே 75 அடி உயரத்திலே ஒரு பிரமிட் புதியதாக கட்டினார்கள் சோதனைக்காக!

சக்தி இழுந்த பேட்டரி செல்லை அதற்குள்ளே சிறிது நாள் வைத்தார்கள். மறுபடியும் எடுத்து உபயோகப்படுத்தி பார்த்தால் அதெல்லாம் புது செல் மாதிரி ஆயிவிட்டது. சாப்பிடுகிற ஆகாரத்தை உள்ளே வைத்துப் பார்த்தார்கள். ரொம்ப நேரம் கெடாமல் இருக்கிறது! தண்ணீர் சுவை அதிகமாகியது. விதைகளின் முளைவிடும் தன்மை விரைவாக நடந்தது.

ஆக்ககூடிய பிரமிடு என்கிறது விஞ்ஞான பூர்வமாக உருவாக்கப்பட்ட கட்டடங்கள் என்கிறது இப்போது தெரிந்து போயிவிட்டது. அதனாலே அங்கேயிருக்கிற உடம்பெல்லாம் உயிர் வந்திடும் என்ற நினைத்து அவர்கள் நம்பிக்கையை கூட நாம் அலட்சியப்படுத்த முடியாது. நாளைக்கு என்ன நடக்குமோ? யாருக்குத் தெரியும்?




# பொன்னிக்கு உதவிய மின்மினி!

'இதென்னகொடுமை? யாரும் உதவ முன் வரவில்லையே. பொன்னி அக்காவிடம் தவளைப் பற்றியும் தேனீயைப் பற்றியும் புகார் செய்கிறேன்.

அக்கா வந்து இவர்களிடம் சண்டையிடுவாள்' என்று எண்ணியவாறு மின்மினி பயணத்தைத் தொடர்ந்தது.

உடல் சோர்வு அதிகரித்ததால் ஒரு பூச்செடியில் உட்கார்ந்தது. ஓர் இலையின் மறைவில் ஓய்வெடுக்க நினைந்து லேசாகக் கண்களை மூடிய நொடியில் அதட்டல் குரல்.

"ஏன் இங்கே இவ்வளவு வெளிச்சம்? இந்தச் சிறு இலை எனக்குச் சொந்தம். இதோ, பாதி இலையைக் கடித்துச் சாப்பிட்டுவிட்டேன்.

ஒரு சில நிமிடங்களில் மீதியையும் தின்று முடிப்பேன். பிறகு, கீழே உள்ள இலைமீது விழுவேன்.

நாளை விடிவதற்குள் கூட்டுப்புழுவாக மாறுவேன். இதற்கெல்லாம் வெளிச்சம் தடையாக இருக்கக்கூடாது" என்றது இலையிலிருந்த பச்சை நிறப் புழு.

மனமுடைந்த மின்மினி அங்கிருந்தும் பறந்தது.

நீண்ட நேரம் பறந்து பொன்னி அக்கா வசிக்கும் குடிசையை அடைந்தது.



பொன்னி முற்றத்தில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். அதைப் பார்த்ததும் தனக்கு நேர்ந்த அவமானத்தை மறந்து பொன்னிக்கு அருகில் சென்று, "ஏனக்கா அழுகிறாய்?" என்று ஆறுதலாகக் கேட்டது.

"நாய்க்குட்டி காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை. உடல் நலம் சரியில்லை. நாள் முழுவதும் முனகிய படி படுத்திருந்தது. அதைக் காப்பாற்ற மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

விலங்குகளுக்கான மருத்துவ உதவி வாகனம் தயாராக உள்ளது. வாகனத்தில் எச்சரிக்கை மணி இருந்தும் அவசரக்கால விளக்கு எரியவில்லை. இரவு நேரத்தில் விளக்கு எரியாமல் சாலையில் பயணிக்கமுடியாது" என்றது.

சற்றும் தாமதிக்காத மின்மினி உதவ முன் வந்தது. "அக்கா, கவலையை விடுங்கள். நான் என் நண்பர்களுடன் வருகிறேன். வாகனத்தின் முன்பாகப் பறந்து செல்கிறோம். அந்த வெளிச்சம் உதவியாக இருக்கும். சீக்கிரம் சென்று நாய்க்குட்டியைக் காப்பாற்றலாம்" என்றது.

மின்மினி சொன்னதைப் போலவே செய்தாள் பொன்னி.

(முற்றும்)

# மகாபாரதம்




தருமா...பகை நட்பு இன்றி அனைவரையும் சம நிலைமையில் வைத்து அரசாளும் அரசன் துறவிகள் பெறும் மேலான கதியை அடைவான். போர்க்களத்தில் வெற்றி அல்லது வீர மரணம் என கடைசி வரை போராடும் மன்னன் துறவிக்கு நிகரானவன்.

நீதி தவறாது நாடாளும் அரசனை நாட்டில் இருக்கும் மக்கள் செய்யும் தருமங்களின் புண்ணியப் பலனில் நான்கில் ஒரு பாகம் வந்தடையும்.

அதே போன்று கொடுங்கோல் ஆட்சி புரியும் மன்னனை நாட்டில் வாழும் மக்கள் செய்யும் பாவத்தில் நான்கில் ஒரு பாகம் வந்து சேரும்.

கானகம் சென்று கடுந்தவம்செய்யும் முனிவர்களை விட நாட்டை நன்கு பரிபாலிக்கும் அரசன் நூறு மடங்கு தருமத்தை அடைவான். நாட்டில் நல்லாட்சி இல்லையெனில் நீர் நிலைகளில் பெரிய மீன் சிறு மீன்களை விழுங்குவதைப்போல வலியோர் மெலியோரை விழுங்கி விடுவர்.

முற்காலத்தில் நாட்டில் அரசன் இல்லாததால் எங்கும் அராஜகம் நிலவியது. மக்கள் பிரமனிடம் சென்று "நாட்டில் எங்கும் குழப்பம் நிலவுகிறது. நாட்டை நல்வழிப்படுத்தி நல்லாட்சி அமைய ஒரு அரசரை அளித்தால் அவரை வழிபடுவோம்" என முறையிட்டனர்.

பிரமதேவர் மனுவை அரசனாக இருக்கச் சொன்னார். நாட்டாட்சி என்பது கடினமான செயல் என மனு தயங்க மக்கள் ஒத்துழைப்பதாக வாக்களித்தனர். நல்லாட்சியை மக்களுக்கு மனு வழங்கி, யாவரும் போற்றத்தக்க மேலான கதியை அடைந்தான்.

முன்னொரு சமயம் வசுமனஸ் என்னும் அரசன் தேவ குருவான பிரகஸ்பதியிடம் சென்று தனக்கு ராஜ நீதியை அருளும்படி கேட்டான்.

அவர் "உலகில் தருமம் நிலைத்திருக்க வேண்டுமானால் நல்ல அரசன் இருக்க வேண்டும். அரசனிடம் கொண்ட அச்சம் காரணமாகத்தான் மக்கள் ஒருவரை ஒருவர் வஞ்சிக்காமல் இருக்கின்றனர்.

(தொடரும்)

எல்லாவிதமான குறைகளையும் தடைகளையும் வென்றுவிடக்கூடிய ஒரே சாதனம் உழைப்பு மட்டுமே.
– ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் சுயபொருளாதாரத்தில் நாம் எழுந்து நிற்பதற்கு...

கொரோனாத் தொற்றிலிருந்து தப்பிப் பிழைத்தாலும் உணவுப் பொருட் தட்டுப்பாட்டிலிருந்து நாம் யாருமே தப்பிப் பிழைக்க முடியாதென அறுதியிட்டுக் கூறமுடியும்.

அந்தளவுக்கு உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு எங்களை ஆட்டிப் படைக்கப் போகிறது.

சீனியின் விலை எகிறிக்கொண்டது. பால்மா வகைகளுக்கு பெருந்தட்டுப்பாடு. இனி அரிசி, கோதுமை, பாண் என்பவற்றின் விலைகள் வானுயரும்.

வருமானம் இல்லை. சுயதொழில் முயற்சி இல்லை. விவசாய உற்பத்தி இல்லை என்ற நிலையில் எப்படிச் சீவியம் நடத்துவது? என்ற கேள்வி எழுவே செய்யும்.

முன்பெல்லாம் ஒவ்வொருவரும் நெல் உற்பத்தியில் ஈடுபடுவர். வீட்டுக்கொரு பசு வளர்க்கப்படும். மா, பலா, வாழை, தென்னை என்பன வேலியோரங்களில் நின்று காய்த்துக் குலுங்கும்.

வீட்டில் சேருகின்ற இலை, குழை குப்பைகள் வயலுக்கு பசளையாக்கப்படும். மாட்டெரு, சவட்டெரு என்பனவும் சேர்ந்தே நெல்லை விளைவிக்க, வைக்கோற்பட்டறை மாட்டுக்கு உணவளிக்கும்.

இதற்கு மேலாக வீட்டுத்தோட்டத்தில் வளருகின்ற கத்தரி, வெண்டி, பயற்றை, முளைக்கீரை, முருங்கை மரக்கறித் தேவைகளைக் கடந்து அயல் வீட்டுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

ஆக, சொந்த வயலில் விளைந்த நெல் வீட்டுக் களஞ்சிய அறையில் குவிந்து கிடக்க, வீட்டுத்தோட்ட மரக்கறியோடு பசு தந்த பாலும் கோழி தந்த ஊர் முட்டையும் சேர்ந்து உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய பஞ்சம், பசி, பட்டினி பறந்தோடிய காலம் அது.

என்ன செய்வது? இப்போதெல்லாம் மாடு வளர்ப்பது மரியாதைக்குறைவாம். நெல் விதைப்பது அவப்பெயராம். கோழி வளர்ப்பதும் வீட்டுத்தோட்டம் செய்வதும் நாகரிகத்துக்குப் பங்கமாம்.

இதற்கேற்றாற்போல விவசாய, கால்நடை அமைப்புகளும் திணைக்கள வாசலில் தொற்றா நோய், தொற்று நோய் பட்டியலை காட்டிவிட்டு உத்தியோகத்தர் இன்று வரார், நாளை வெளிக்களம், மறுதினம் சுவட்டம்.

அந்தோ! ஆடு வளர்த்தவன், மாடு வளர்த்தவன் தலையில் மண்ணைக் கொட்டிவிட்டு, வேண்டாம் இந்த வேலை. சும்மா இருந்தவன் கெட்டிக்காரன் என்று அறம் பாடிவிட்டு போய் விடுகின்றான்.

இதுவே எங்கள் வடபுலத்து நிலைமை. இந்த நிலை மாறாத நிலையில் நோயும் பிணியும் அகலா என்பதுதான் உண்மை.

புரட்சி எழ வேண்டும் என எவரேனும் நினைத்தால் அது நெல் விதைப்பில், கால்நடை வளர்ப்பில், வீட்டுத்தோட்டச் செய்கையில் புரட்சியாய் மலரட்டும். அதுபோதும் சுயபொருளாதாரத்தில் நிறைவு கண்டு சொந்தக் காலில் நிற்பதற்கு.

ஆம், உத்தம அரச அதிகாரிகளே! வீட்டுத் தோட்டத்தை, பசு வளர்ப்புத் திட்டத்தை, ஆடு, கோழி வளர்த்து ஆரோக்கியம் பேணுகின்ற முறைமையை அமுலாக்குவதற்கு உதவுங்கள். ஊக்குவியுங்கள்.

எங்கள் மக்கள் எழுச்சியோடு மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இது பெருந்துணையாய் அமையும்.

# 2 ஆயிரம் ரூபாய் நிவாரண கொடுப்பனவு போதுமானதல்ல

## இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட்

(கொழும்பு)

குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு போதுமானதல்ல என்பதனை தாம் ஏற்றுக்கொள்வதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாளாந்தம் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டும்.

சுகாதார நடைமுறைகளுடன் அவர்கள் தொடர்ந்தும் தங்களது அன்றாட தொழில்களில் ஈடுபட அனுமதி வழங்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

2 ஆயிரம் ரூபாய் நிவாரணத்தால் தற்காலிகமாக அவர்களுக்கு நன்மை ஏற்பட்டாலும், அவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்குவதே சிறந்த வழியாகும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.(ம-3)

## வடக்கில் 30 வயதுக்கு மேற்பட்டோரில்

# நேற்றுவரை 30 சதவீதமானோர் இரண்டு தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் நேற்று மாலை வரை 30 சதவீதமானோர் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் எடுத்துள்ளனர் என்று வடமாகாண சுகாதார திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் அதிகப்படியாக 66.05 சதவீதமானோரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 37.11 சதவீதமானோரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 12.60 சதவீதமானோரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 12.03 சதவீதமானோரும் வவுனியா மாவட்டத்தில் 6.74 சதவீதமானோரும் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 6 லட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் உள்ளனர். அவர்களில் 5 லட்சத்து 52 ஆயிரத்து 49 பேர் கோவிட்-19 தடுப்பூசியின் முதலாவது அலகைப் பெற்றுள்ளனர். இது 83.96 சதவீதமாகும்.

இந்த நிலையில் மூன்றாம் கட்டத்தின் இரண்டாவது அலகு தடுப்பூசி மருந்தேற்றும் பணி நேற்று ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## மல்லாவி ஆதார வைத்தியசாலையில்

# குழந்தைகள் மூவர் உட்பட 10 பேருக்கு கொரோனா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மூவர் உட்பட 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் இருந்து 11 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவ்வாறு 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு வயது பெண் குழந்தை மற்றும் 1, 2 வயது ஆண் குழந்தைகள் இருவர் என குழந்தைகள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர 16, 26, 36 வயது ஆண்களும் 27, 30, 34, 45 வயது பெண்களும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-3)

# துன்னாலை குடவத்தையில் கசிப்புடன் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை குடவத்தைப் பகுதியில் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலை குடவத்தைப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,60)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## அன்பே உலகில் உயர்ந்தது

❖ பிறருக்கு உதவுவது என்பது நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதற்காக தரப்படுகின்ற வாய்ப்பு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

❖ இறைவன் ஒரு பெரிய காந்தக் கல்லினை போல இருக்கிறார். நாமெல்லாம் இரும்பு துகள்களைப் போல அவரால் எப்போதும் கவரப்பட்டு இருக்கிறோம்.

❖ வாழ்வில் ஏற்படும் கொடிய போராட்டங்கள், கொந்தளிப்புகள் அனைத்தும், முடிவில் இறைவனை அடைந்து அவருடன் ஒன்று கலப்பதற்காகவே.

❖ எண்ணத்தையும், புத்தியையும், ஆராய்ச்சி மனப்பான்மையையும் கடக்கும்போது தான் கடவுளை நோக்கிமுதல் அடியை எடுத்து வைக்கிறீர்கள்.

❖ தன்னலம், கணக்குப் பார்த்தல், பேரம்பேசுதல், அர்த்தமற்ற பயம் போன்றவற்றில் இருந்து கடந்து வந்தவனால் மட்டுமே முழுமையான பக்தி செலுத்த முடியும்.

❖ அன்பே உலகை அரவணைத்துச் செல்லும் உயர்ந்த குணம். அன்பு நிறைந்திருக்குமிடத்தில் குறுகிய சிந்தனைகள் உண்டாவதில்லை.

# மாகாண சபைத் தேர்தல்கள்

22

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மாகாண சபைகளுக்கு ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 8இல் தரப்பட்டுள்ளது. இவ் வர்த்தமானி அறிவித்தலின்படி, மாகாணசபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப் படவில்லை.

### 2004ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டம்

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் ஆரம்ப சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபைகள் உள்ளடக்க வேண்டிய குறிப்பான உறுப்பினர்களின் எண்ணிக்கை விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் ஏதேனுமொரு குறிப்பிட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின் பின்னர் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலொன்றிருப்பின், அச்சந்தர்ப்பத்தில், மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 3(அ) ஆம் பிரிவிற்கமைய மாவட்டங்களிலிருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின் தகவல்களுக்கமைய கணக்கிட்டு மீண்டும் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான சட்ட அவகாசம் காணப்பட்டது. அதற்கமைய 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாக வைத்து அதன் பின்னர் நடத்தப்படுகின்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான கட்டளை, 2003.12.16 ஆம் தேதிய 1319/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேர்தல்கள் ஆணையாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இக் கட்டளை 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் நீக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியினால் விதிக்கப்படுகின்ற கட்டளை மூலம் தீர்மானிக்கப்படுகின்ற மாகாணங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை குறிப்பான தீர்மானமாக ஏற்கப்பட்டு மாகாணத்தின் நிர்வாக மாவட்டங்களின் கீழான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு நேரொத்தவாறு, புதிய சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாகவைத்து மாவட்டங்களுக்கு உரித்தாகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது. அதற்கமைய ஒரு மாகாண சபையில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாது. அது அட்டவணை-9ல் காட்டியது போன்று, 1987ல் தீர்மானித்தவாறே இருக்கும். ஆனால் புதிய சனத்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் இவ்வெண்ணிக்கை மாவட்டங்களுக்கிடையே விகிதாசார முறையில் பிரிக்கப்பட வேண்டும்.

**அட்டவணை 9 ஒவ்வொரு மாகாணசபையின்தும் உறுப்பினர்களின்எண்ணிக்கை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேல் | 104 | சப்ரகமுவ | 44 | தெற்கு | 55 |
| வடமேல் | 52 | மத்திய | 58 | வடமத்திய | 33 |
| ஊவா | 34 | கிழக்கு | 37 | வடக்கு | 38 |

1981 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்படி, 1987 ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டுத் தேர்தல் வரை மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படவேண்டிய மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது. கொழும்பு-43, கம்பஹா-36, களுத்துறை-23, கண்டி-28, மாத்தளை-11, நுவரெலியா-17, காலி-22, மாத்தறை-17, அம்பாந்தோட்டை-14, குருநாகல்-35, புத்தளம்-15, அநுராதபுரம்-21, பொலன்னறுவை-10, பதுளை-19, மொனறாகலை-13, இரத்தினபுரி-23, கேகாலை 19 ஆகும்.

2001 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின்படி, 2004 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படவேண்டிய மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு மாற்றமடைந்தது. கொழும்பு-43, கம்பஹா-39, களுத்துறை-20, கண்டி-30, மாத்தளை-10, நுவரெலியா-16, காலி-23, மாத்தறை-18, அம்பாந்தோட்டை-12, குருநாகல்-34, புத்தளம்-16, அநுராதபுரம்-21, பொலன்னறுவை-10, பதுளை-21, மொனறாகலை-11, இரத்தினபுரி-24, கேகாலை-18 ஆகும்.

### நான்காவது மாகாண சபைத் தேர்தல் -2004
### வேட்பு மனுக்கள்

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுக்கிணங்க, ஏதேனும் ஒரு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைந்த தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் தமது கருத்துத் தொடர்பான அறிவித்தலொன்றை தேர்தல் ஆணையாளர் வெளியிடல் வேண்டும். எந்த மாகாணம் சார்பாக மாகாண சபை அமைக்கப்படுகின்றதோ அந்த மாகாணத்தின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் தெரிவத்தாட்சி அலுவலரினால் தமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் வேட்புமனுக்கள் கையேற்கப்படுவதாகவும், அவ்வேட்புமனுக் கால எல்லை தொடர்பாகவும் வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் இவ்வறித்தலில் குறிப்பிடப்படல் வேண்டுமெனவும் குறித்த பிரிவில் விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க 2004.02.08 ஆம் தேதியில் பதவிக்காலம் முடிவடைந்த வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு 2004.02.13 ஆம் திகதியும் 2004.04.25 ஆம் திகதி யில் பதவிக்காலம் முடிவடைந்த மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளுக்காக 2004.04.30 ஆம் தேதியும் வேட்புமனு அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. மேல், வட மத்திய, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்காக முறையே மே 4,மே 5,மே 3 ஆம் திகதிகளில் பதவிக்காலம் முடிவடைந்த போதிலும் பதவிக்காலம் முடிவடைந்த தினத்திலிருந்து ஒருவாரத்துக்குள் வேட்புமனு அறிவித்தல்களை வெளியிடுவதற்காக சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமையால் 2004.05.07 ஆம் திகதி வேட்புமனு அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

தென் மாகாணத்தின் மாகாண சபைக்கான பதவிக்காலம் ஜூலை மாதம் 7 ஆம் திகதி முடிவடைய இருந்த போதிலும், அரசியல் அமைப்பின் 154(அ)8(இ) ஆம் உறுப்புரையின் கீழ் மாகாண ஆளுநருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கிணங்க அம் மாகாண சபையும் 2004.05.05 ஆம் திகதி முதல் செயற்படும் விதத்தில் 1339/1 ஆம் இலக்க 2004.மே மாதம் 3 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் கலைக்கப்பட்டது. அதற்கிணங்க தென் மாகாண சபை சார்பாகவும் 2004.05.07 ஆம் திகதி வேட்புமனு அறிவித்தலை வெளியிட முடிந்தது. மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுக்கிணங்க, வேட்புமனு அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட தினத்தின் பின்னர் வருகின்ற 14 ஆம் நாளில் ஆரம்பித்து 21 ஆம் நாள் நண்பகல் 12 மணிக்கு வேட்புமனுக்களைக் கையேற்றல் முடிவடைதல் வேண்டும்.

அதற்கிணங்க வடமேல் மாகாண சபைக்கு 2004.02.27 ஆம் திகதியிலிருந்து 2004.03.05 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டதோடு, அக்கால எல்லைக்குள் குருநாகல் மாவட்டத்துக்காக 14 வேட்பு மனுக்களும் புத்தளம் மாவட்டத்துக்காக 15 வேட்புமனுக்களுமாக மொத்தம் 29 வேட்புமனுக்கள் கிடைத்தன. அவற்றில் குருநாகல் மாவட்டத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட 2 வேட்புமனுக்கள் உரிய வேட்பாளர்களால் சத்தியம்/ உறுதியுரை வெளிப்படுத்துகை சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டன. குருநாகல் மாவட்டத்தின் 34 மாகாண சபை உறுப்பினர்களுக்காக 444 வேட்பாளர்களும், புத்தளம் மாவட்டத்தின் 16 மாகாண சபை உறுப்பினர்களுக்காக 285 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். மேற் குறித்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் குருநாகல் மாவட்டம் சார்பாக 38 பெண்களும் புத்தளம் மாவட்டம் சார்பாக 11 பெண்களும் போட்டியிட்டனர்

மத்திய, ஊவா மாகாண சபைகளின் பதவிக்காலம் 2004.04.25 ஆந் திகதியில் முடிவடைந்தமையால் அவ்விரண்டு மாகாண சபைகள் சார்பாகவும் வேட்புமனுக்கள் கோரி 2004.04.30 ஆம் திகதியைக் கொண்ட வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டதோடு, அதற்கிணங்க தெரிவத்தாட்சி அலுவலர்களால் அந்தந்த மாவட்ட செயலக அலுவலகங்களில் 2004.05.14 ஆம் திகதியிலிருந்து 2004.05.21 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன. மத்திய மாகாண சபை சார்பாக 32 வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டதோடு, ஊவா மாகாண சபை சார்பாக 17 வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன.

(தொடரும்...)

## மரணச் சடங்கில்...

தாவது,

இம்மாதம் 24ஆம் திகதி வவுனியா ஓமுமடு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பட்டடைபிரிந்தகுளம் பகுதியில் மரணச் சடங்கு ஒன்று இடம்பெற்றது.

பின்னர் அவரது குடும்ப உறுப்பினர் இருவருக்கு சுகவீனம் ஏற்பட்டதை யடுத்து புளியங்குளம் வைத்தியசாலைக்கு சென்று அன்டிஜன் பரிசோதனை மேற் கொண்டபோது இருவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து வவுனியா வடக்கு சுகா தாரப் பிரிவினரால் மரணச் சடங்கில் கலந்து கொண்ட நெருங்கிய உறவினர்கள் 30 பேருக்கு நேற்றைய தினம் அன்டிஜன் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் மரணச் சடங் கில் பங்கேற்ற ஏனையவர்களை இனங் கண்டு பரிசோதனை மேற்கொள்ளவுள்ள தோடு சுகாதாரப் பிரிவினர் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவுள்ள னர். (ம-3,299)

## கையளிக்கப்பட்ட...

முயற்சி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குறித்த சடலத்தை சுகா தாரத் தரப்பினர் மீளப் பெற்றுச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த பெண் உயிரிழந்த நிலையில் பல நாட்களாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் அவரின் சடலம் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் குறித்த பெண் ணுக்கு தொற்று இல்லை என்று வைத் தியசாலை நிர்வாகம் குடும்பத்தாரிடம் சடலத்தைக் கையளித்திருந்தது.

இதனையடுத்து நேற்று முற்பகல் அவருக்குரிய இறுதிச் சடங்கினை மேற் கொள்வதற்கான ஏற்பாட்டினை குடும்பத் தார் மேற்கொண்டிருந்தனர்.

இருந்தபோதிலும் பின்னர் வெளி யாகிய யாழ்.போதனா வைத்தியசாலை யின் பிசிஆர் அறிக்கையில் அவருக்கு தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதிசெய்யப் பட்டிருந்தது.

சம்பவத்தையடுத்து இந்த விடயம் குறித்து கிராம மக்கள் மிகுந்த அச்சமும் கவலையும் அடைந்திருந்தனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை சுகா தாரத் தரப்பினர் சடலத்தை மீளப் பெறச் சென்றிருக்கின்றனர்.

இதன்போது குடும்பத்தார் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் பின்னர் பொலிஸாரின் துணையுடன் சடலம் அங்கிருந்து மீளப் பொறுப்பேற்கப்பட்டுக் கொண்டு செல்லப் பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## +4,562...

டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற் றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 36 ஆயிரத்து 81 ஆக அதிகரித் துள்ளது.

இதேவேளை, நாட்டில் கோவிட் தொற்றிலிருந்து மேலும் 14,394 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கோவிட் தொற்றிலிருந்து குணமடைந்த வர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட் சத்து 71 ஆயிரத்து 992 ஆக அதிகரித் துள்ளது. (ம-3)

## சாதகமான...

மனித உரிமை கூட்டத்தொடரில் ஒவ் வொரு வருடமும் இலங்கை மீது சுமத்தப் படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற் றவை.

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை மற்றும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தொடரில் இலங்கை விவ காரத்தில் சாதகமான தீர்வு எட்டப்படும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத் தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## 216 மரணம்...

அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட் டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 8,991 ஆக அதி கரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 115 ஆண்களும் 101 பெண்களும் அடங்குவதாக அரச தக வல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கு குறைவான 5 பேரும் அடங்குவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கோவிட் மரணங்...

நாடு முடக்கப்பட்டுள்ள நிலைமையிலும் கோவிட் தொற்றாளர்கள் மற்றும் மரணங் களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது தொடர்பாக தெரிவிக்கையிலேயே இவ் வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் கோவிட் நோயாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக் கையை உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் மிகவும் அதிகரித்த வீதத்தையே காட்டுகின்றது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்திக் கொள்ள கடுமையான பயணக் கட்டுப் பாடுகளை விதிக்க வேண்டும்.

நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக் கின்றது என்றாலும், பொதுமக்கள் இது தொடர்பாக எந்த சிந்தனையும் இல்லாமல் செயற்படுவதைக் காண்கின்றோம். இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும் என அவர் தெரிவித்தார். (ம-3)

## கிளிநொச்சியில்...

மாவட்ட வைத்தியசாலை ஊடாக பிசிஆர் மாதிரிகள் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப் பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த நபர்களுக்கு தொற்று இருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்.மாவட்டத்...

வல்வெட்டித்துறையில் 81 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்தார். அவ ருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனாவில் ஒரு பெண் உயிரி ழந்திருந்தார். அவருக்கு பிசிஆர் பரிசோத னையில் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்திய

# வவுனியாவில் மேலும் 215 பேருக்கு கோவிட்

## ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 215 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதோடு ஒருவர் கொரோனாவால் மரணமாகியுள்ளார்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்பு களைப் பேணியோர், வவுனியா வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள் ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரி சோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 215 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது.

மேலும் மரணித்த நெடுங்கேணியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணின் உடலை சுகாதார நடைமுறைகளைப் பின் பற்றி தகனம் செய்யவும் சுகாதாரப் பிரிவி னர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250,299)

சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு வர், யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் என தென்மராட்சியின் எழுதுமட்டுவாழ், கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கொரோனாவால் நேற்று உயிரிழந்திருந்தனர். (ம-3,18,33,60)

## யாழ் - 75...

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று 284 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**யாழ். மாவட்டத்தில் 75 பேர்**

கோப்பாய் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் 18 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மூவர் உட்பட 10 பேர், யாழ். போதனா வைத்திய சாலையில் 18 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 18 பேர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17 பேர், ஊர்காவற்றுறை பிரதேச வைத்திய சாலையில் 12 பேர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 04 பேர், சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதி காரி பிரிவில் 02 பேர், வீனஸ் மருத்துவ மனையில் ஒருவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பேர்**

மல்லாவி ஆதார வைத்தியசாலை யில் 10 பேர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர், புதுக்குடி யிருப்பு ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 04 பேர்**

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் 04 பேர் (உயிரிழந்த இருவர் உட்பட)

**வவுனியா மாவட்டத்தில் 04 பேர்**

வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் 03 பேர், புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**மன்னார் மாவட்டத்தில் 04 பேர்**

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒருவர், மன்னார் கடற்படை முகாமில் 02 பேர், வெள்ளாங்குளம் விமா னப்படை முகாமில் ஒருவர்.

மேலும் வவுனியாவில் 215 பேருக்கு மாக தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3)

## தொற்றாளர்கள்...

கோவிட் வைரஸ் தொற்றாளர்கள் பலர் இன்னும் சமூகத்தில் உள்ளனர். அவர் களை தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்து சிகிச்சையளிக்க முடியாது. முடிந் தளவு பொதுமக்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்குவதே இப்போது இருக் கும் ஒரே வழிமுறையாகும்.

ஆகவே குறைந்தது 21 நாட்களேனும் அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்தி னால் நிலைமைகளை வெகுவாக குறைக்க முடியும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டில் கோவிட் - 19 வைரஸ் பரவல் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போதைய கட்டுப்பாடுகள், முடக்க நிலைமைகள் குறித்து தெளிவு படுத்தும்போதே அவர் இதனைக் கூறி னார். (ம-3)

## அத்தியாவசிய...

தாவது,

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங் கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் iiஆவது பிரி வின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்குவரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியா வசிய உணவுப் பொருட்களை மொத்த மாகப் பதுக்குதல், அதிக விலை அறவிடு வதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத் துக்கு உள்ளாக்கும் சந்தை முறைகேடு களைத் தவிர்ப்பதற்காக, அரசின் உத்தர வாத விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையை அடிப் படையாகக் கொண்டு நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து மக்களுக்கு நியாயமான விலைக் குப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் நட வடிக்கை எடுப்பதற்கும், அரச வங்கிகளின் மூலம் மொத்தமாகக் கொள்வனவு செய் வதற்கு வழங்கப்பட்டுள்ள கடன், கடன் பெற்றுக் கொண்டவர்களிடம் இருந்து அற விடப்படக்கூடிய வகையில் இது நடை முறைப்படுத்தப்படும்.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணு வதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவை கள் ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பீ.நிவுன்ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## குருநகர் இளைஞன் படுகொலை
# முதன்மைச் சந்தேகநபர்கள் உள்ளிட்ட 6 பேர் பொலிஸில் சரணடைவு

(யாழ்ப்பாணம்)

குருநகர் இளைஞன் படுகொலையுடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபர்கள் உள்ளிட்ட 6 பேர் நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

குருநகர் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஜெரன் (வயது-24) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மற்றோரு குழு அவர்கள்மீது சரமாரியாக வாள்வெட்டினை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றிருந்தனர். சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தேடி தீவகம் உட்பட பல இடங்களில் தேடுதல் நடத்தினர்.

இந்நிலையில் 9 நாட்களின் பின்னர் முதன்மைச்சந்தேக நபர் உட்பட 6 பேர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

எனினும் முதன்மைச்சந்தேக நபர்களில் ஒருவர் நேற்று சரணடைந்தவர்களில் இல்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 5 பேர் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவருக்கும், தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் 2018ஆம் ஆண்டு மோதல் இடம்பெற்றதாகவும் அதன் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (ம-03,18,33)

## தியாகி அறக்கொடை ஸ்தாபகரால்
# சுகாதார அலுவலர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிதியஸ்தாபகத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் யாழ். மாவட்டத்தில் கொடிய வைரஸ் தாக்கத்தின் மத்தியிலும் அர்ப்பணிப்புடன் விசேடமாக பணியாற்றும் 100 பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் (PHI ) 250 பொதுச் சுகாதார மாதுக்களுக்குமாக (PHM) மொத்தம் 350 சுகாதார அலுவலர்களை கௌரவித்து விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத்தில் கோவிட் - 19 சுகாதார இடைவெளியைப் பின்பற்றி இடம்பெறும்.

இந் நிகழ்வுக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியும் யாழ். மாவட்ட கோவிட் பிரதானியுமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

இதேவேளை இன்றைய தினம் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள தெரிவுசெய்யப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன. (ம-03)

## மந்திகை வைத்தியசாலையில்
# 40 பேருக்கு அன்டிஜன் 30 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனைக்கு நேற்று வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்கு சென்றவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 30 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் 40 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 30 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையின் 75 சதவீத நேர்மறை முடிவாகும்.

அவர்கள் 30 பேரும் மருத்துவர்களின் ஆலோசனையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டியவர்கள், இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்படவேண்டியவர்கள் மற்றும் வீடுகளில் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் என பிரித்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-03,33)

## கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில்
# 20 பேருக்கு பிசிஆர் சோதனை 18 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று (ஓகஸ்ட்-30) மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இருந்து 20 பேரின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவ்வாறு 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

14, 26, 36, 52, 67 வயது பெண்கள் ஐவர் மற்றும் 27, 29, 30, 30, 31, 32, 34, 37, 37, 40, 59, 70, 77 வயதுடைய 13 ஆண்களும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


# காணி விற்பனைக்கு




நீர்வேலி தெற்கு. கரந்தன் பகுதியில் 13 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு - 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
( தரகர் தேவையில்லை )
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(7821)

077 814 7389
077 614 7333


# காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி லண்டனில் போராட்டம்

(ஜெனிவா)

ஐ.நாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட (ஓகஸ்ட் -30) வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளையொட்டி, உலகளாவியரீதியில் பல்வேறு கவனயீர்ப்பு நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.




அந்தவகையில், இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி பிரித்தானியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்களால் Trafalgar Square சதுக்கத்தில் நேற்று மதியம் 1 மணி முதல் மாலை 3 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை ஜேர்மன், பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.(ம-03)


**G.C.E O/L Paper Class for English Language or English Literature through online**

- சிறந்த பெறுபேற்றிற்கான உத்தரவாதம்
- மகிழ்ச்சியான கற்றல் அனுபவம்
- தனித்தனியான கவனமெடுப்பும் அதற்கு ரீதியான பரிகார வழிகாட்டலும்
- மாதிரிப் பரீட்சையும் வழிகாட்டல் கலந்துரையாடலும்
- முற்பணக் கட்டணம் ரூபாய் 1,000.00
- மாதாந்தம் 10 வகுப்புகள்

A+

நீண்ட கால அனுபவமிக்க தகுதிவாய்ந்த ஆங்கில விரிவுரையாளரால் நெறிப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் September மாதம்முதல் வகுப்புகள் ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு தங்கள் பெயர். பாடத் தெரிவு (English Language/Literature) மற்றும் வட்சப் இலக்கத்தினை 077 788 0330 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யவும்.

(C-2801)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.